Tirunelveli

திருநெல்வேலி மாவட்டம்

காலாண்டுப் பொதுத் தேர்வு - செப்டம்பர் 2025

-----

# வகுப்பு 10

காலம்: 3.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 100

## பகுதி - I

* **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **15×1=15**

* **கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக.**

1) வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பது
அ) குலைப்பெயர் வகை ஆ) மணிப்பெயர் வகை
இ) கிளைப்பெயர் வகை ஈ) இலைப்பெயர் வகை

2) எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்.
அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா
இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா

3) ''சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் - என்றன்
சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்'' - என்றவர்
அ) பாரதிதாசன் ஆ) பாவலரேறு பெருஞ்சித்திரனார்
இ) கண்ணதாசன் ஈ) க. சச்சிதானந்தன்

4) அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைந்தது
அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

5) உலகக் காற்று நாள்
அ) சூன் 15 ஆ) சூலை 15 இ) சனவரி 15 ஈ) சூன் 25

6) பரிபாடல் அடியில் 'விசும்பில், இசையில்' ஆகிய சொற்கள் குறிப்பவை எவை?
அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வான்வெளியில் பேரொலியில்
இ) வானத்தில், பூமியையும் ஈ) வானத்தையும், பேரொலியையும்

7) காலில் அணியும் அணிகலனைக் குறிப்பது
அ) சுட்டி ஆ) கிண்கிணி இ) குழை ஈ) சூழி

8) 'விருந்தினரைப் பேணுவதற்கு பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் புணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு' இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை
அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து
இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

9) காலம் கரந்த பெயரெச்சம் என்பது
அ) உவமைத்தொகை ஆ) பெயரெச்சத்தொடர்
இ) வினையெச்சத்தொடர் ஈ) வினைத்தொகை

10) கீழ்க்காண்பனவற்றுள் எந்த இலக்கியம் பிறமொழிப் படைப்பினைத் தழுவித் தமிழில் படைக்கப்பட்டது?
அ) திருக்குறள் ஆ) கம்பராமாயணம் இ) கலித்தொகை ஈ) சிலப்பதிகாரம்

11) படர்க்கைப் பெயரைக் குறிப்பது எது?
அ) யாம் ஆ) நீவிர் இ) அவர் ஈ) நாம்

**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக:**

விதிமுறை கதலிபூகம் கவரிவால் விதானம் தீபம்
புதியதார் நிறைநீர்க் கும்பங் கதலிகை புனைந்த மன்றல்
கதிர்மணி மாடத் தம்பொற் சேக்கைமேற் கற்றோர் சூழ
மதிபுனை காடன் தன்னை மங்கல அணிசெய் தேற்றி.

12) கதலிகை என்பதன் பொருள்
அ) வாழை ஆ) கொடி இ) விதானம் ஈ) கமுகு

13) இப்பாடலின் ஆசிரியர்
அ) கீரந்தையார் ஆ) பரஞ்சோதி முனிவர்
இ) அதிவீரராம பாண்டியர் ஈ) சேக்கிழார்

14) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்

அ) திருவிளையாடற்புராணம் ஆ) பரிபாடல்

இ) பெரியபுராணம் ஈ) காசிக்காண்டம்

15) இப்பாடலில் அமைந்துள்ள நயம்

அ) அடிமோனை ஆ) இயைபு இ) அடிஎதுகை ஈ) முரண்

## பகுதி - II

### பிரிவு - 1

* **எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4×2=8**

* **21-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க.**

16) மன்னும் சிலம்பே! மணிமேகலை வடிவே!
முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!
- இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

17) **விடைக்கேற்ற வினா அமைக்க:**

அ) காற்று, தெற்கிலிருந்து வீசும் போது தென்றல் என அழைக்கப்படுகிறது.

ஆ) மொழிபெயர்ப்பு என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பதாகும்.

18) செங்கீரை ஆடுதலில் எந்தெந்த அணிகலன்கள் சூட்டப்படுவதாக முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் குறிப்பிடுகிறது?

19) தமிழர்கள் வீசுகின்ற திசையைக் கொண்டு காற்றுக்கு எவ்வாறு பெயர் சூட்டியுள்ளனர்?

20) மொழிபெயர்ப்பின் பயன் குறித்து எழுதுக.

21) 'தரும்' என முடியும் குறட்பாவை எழுதுக.

### பிரிவு - 2

* **எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **5×2=10**

22) ''சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்து கத்துவானே தவிர கடிக்க மாட்டான்'' என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

23) கட்டுரை படித்த - இச்சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபைப் பயன்படுத்தித் தொடரை விரித்து எழுதுக.

24) **கீழ்க்காணும் தொடர்களில் எண்ணுப்பெயர்களைக் கண்டுபிடித்து தமிழ் எண்களில் எழுதுக:**

அ) ஐந்து சால்பு ஊன்றிய தூண்.

ஆ) நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.

25) **கொடுக்கப்பட்டுள்ள இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க:**

அ) கொடு - கோடு

ஆ) மலை - மாலை

26) 'அமர்ந்தான்' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

27) **அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக:**

அ) ''இதோ முடித்துவிடுவேன்'' என்று செயலை முடிக்கும் முன்பே கூறினார். **(வழுவமைதியாக மாற்றுக)**

ஆ) பழகப் பழகப் பாலும் புளிக்கும். **(தொடர் வகையைச் சுட்டுக)**

28) **கலைச்சொல் தருக:**

அ) Hospitality

ஆ) Culture

## பகுதி - III

### பிரிவு - 1

* **எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** **2×3=6**

29) 'தனித்து உண்ணாமை' என்பது தமிழரின் விருந்தோம்பல் பண்பின் அடிப்படையாக அமைந்தது. இப்பண்பு இக்காலத்தில் அடைந்துள்ள மாற்றங்களைப் பட்டியலிடுக.

30) 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' இதுபோன்று இளம் பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

31) **பின்வரும் உரைப்பத்தியைப் படித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்க:**

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர்.

தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர். உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வரவேண்டும். ஏனென்றால் வலது கையால் உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள் நாம். இலையில் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளையும் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதல்ான அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவார்கள். உண்பவர் மனமறிந்து, அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறுவர்.

**வினாக்கள்:**

அ) தமிழர்க்ள் எந்த இலையில் விருந்தளிப்பதை மரபாகக் கொண்டிருந்தனர்?

ஆ) இலையில் இடப்பக்கம் பரிமாறப்படும் உணவுகள் யாவை?

இ) உரைப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

## பிரிவு - 2

* ***எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.*** **2×3=6**

* ***34-வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க.***

32) உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

33) மன்னன் இடைக்காடனார் என்ற புலவருக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.

34) 'தென்னன் மகளே' - எனத் தொடங்கும் அன்னை மொழியே பாடலை எழுதுக.

**(அல்லது)**

'விருந்தினனாக' எனத் தொடங்கும் காசிக்காண்டம் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

## பிரிவு - 3

* ***எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.*** **2×3=6**

35) மார்கழித் திங்கள் அதிகாலை நேரத்தில் மக்கள் நடைபயிற்சி மேற்கொண்டனர். சிலர் மிதிவண்டியில் சென்றனர். சாலை ஓரத்தில் இருந்த வீட்டின் மதிலை ஒட்டிச் செங்காந்தள் மலர்கள் பூத்துக் குலுங்கியபடி இருந்தன. அவற்றைப் பார்த்தபடியே வீடு சென்றேன்.

- இப்பத்தியைப் படித்துத் தொகை நிலைத் தொடர்களைக் கண்டறிந்து எழுதுக.

36) அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல் - இக்குறட்பாவை அலகிட்டு வாய்பாடு தருக.

37) எடுத்துக்காட்டு உவமையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

## பகுதி - IV

* ***அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.*** **5×5=25**

38) காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்
அவனும் யானுமே அறிந்தவை; அறிக!

**(அல்லது)**

ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் கூறிய கருத்துகளை வள்ளுவர் வழிநின்று விளக்குக.

39) மாவட்ட அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

**(அல்லது)**

உங்கள் கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்து தர வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பம் எழுதுக.

40) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**



41) தனியார் நிறுவனத்தில் கணினி பயிற்றுநர் பணி வேண்டி கொடுக்கப்பட்டுள்ள படிவத்தினை நிரப்புக.

42) **கீழ்க்காணும் ஆங்கில உரைப்பத்தியை தமிழில் மொழிபெயர்க்க:**

Respected ladies and gentlemen, I am Ilangovan studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamils throughout India, Srilanka, Malaysia, Singapore, England and Worldwide. Though our culture is very old, it has been updated consistently. We should feel proud about our culture. Thank you one and all.

**(அல்லது)**

நீங்கள் பள்ளியில் நடந்துகொள்ளும் ஒழுக்க முறைகள் ஐந்தினைப் பட்டியலிடவும்

**பகுதி - V**

* ***அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க.*** **3×8=24**

43) நாட்டு வளமும் சொல் வளமும் தொடர்புடையது என்பதை பாவாணர் வழிநின்று விளக்குக.

**(அல்லது)**

சங்ககாலத் தமிழர்களின் விருந்தோம்பல் பண்பைச் சான்றுகளுடன் விளக்குக.

44) 'பிரும்மம்' கதை உணர்த்தும் பிற உயிர்களைத் தம் உயிர் போல் நேசிக்கும் பண்பினை விவரிக்க.

**(அல்லது)**

'கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைப் புகினும் கற்கை நன்றே' என்கிறது வெற்றிவேற்கை.
மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம். அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

45) குமரிக்கடல் முனையையும், வேங்கட மலை முகட்டையும் எல்லையாக கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில் சேர் கன்னியாம் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவையாத்து அணியாகப் பூட்டி அழகூட்டி அகம் மிக மகிழ்ந்தனர். செந்தாப் புலவர்கள் - இக்கருத்தை கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

**(அல்லது)**

**கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக:**
முன்னுரை - உயிராக நான் - பல பெயர்களில் நான் - நான்கு திசையிலும் நான் - இலக்கியத்தில் நான் - மனிதனால் மாசடையும் நான் - மாசு நீக்கும் வழிகள் - முடிவுரை.

----------